©
தமிழ்நாடு அரசு
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 2.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 14] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 7, 2021
பங்குனி 25, சார்வாரி, திருவள்ளுவர் ஆண்டு–2052

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 17 பிப்ரவரி 2021.]*

தமிழ்நாடு 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் மத்தியச் சட்டம் 4/1936 15–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 01–07–2015 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2இன் 452ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II (2)/தொ.வே/345/2015 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாக தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் அட்டவணையின் நெடும்பத்தி (2) இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்ட அலுவலர்களை, அதன் நெடும்பத்தி (3) இன் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்காக பணியாளர்களின் ஊதியப் பிடித்தம், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஏற்படும் தாமதம் தொடர்பான அனைத்து பிரச்சனைகள் குறித்து எழும் கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காணும் அதிகாரிகளாக இதனால் நியமனம் செய்கிறார்.

**அட்டவணை.**

| *தொடர் எண்* (1) | *அலுவலர்கள்* (2) | *பகுதி* (3) |
|---|---|---|
| 1. | தொழிலாளர் நலத்துறை ஆணையர் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் |
| 2. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர்–I சென்னை. | காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்களின் வரையறைக்குள் வரும் பகுதிகள் நீங்கலாக உள்ள சென்னை மாநகராட்சி. |
| 3. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர்–II சென்னை. | காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மற்றும் கடலூர் வருவாய் மாவட்டங்கள். |
| 4. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், வேலூர். | வேலூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மற்றும் விழுப்புரம் வருவாய் மாவட்டங்கள். |
| 5. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்கள். |
| 6. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், மதுரை. | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள். |
| 7. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், திண்டுக்கல். | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் வருவாய் மாவட்டங்கள். |

| தொடர் எண் (1) | அலுவலர்கள் (2) | பகுதி (3) |
|---|---|---|
| 8. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், திருநெல்வேலி | தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி வருவாய் மாவட்டங்கள். |
| 9. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் வருவாய் மாவட்டங்கள். |
| 10. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், சேலம். | சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி வருவாய் மாவட்டங்கள். |
| 11. | தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர், குன்னூர். | நீலகிரி நாமக்கல் மற்றும் ஈரோடு வருவாய் மாவட்டங்கள் |

**அறிவிக்கைகள்–II**

*[அரசாணை (நிலை) எண். 31, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 17 பிப்ரவரி 2021.]*

தமிழ்நாடு 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1936) 14–ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 16–03–2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2இன் 122 முதல் 123 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II (2)/தொ.வே/174/2005 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் நோக்கங்களுக்காக, கீழே அட்டவணையின் நெடும்பத்தி (2) இல் குறிப்பிடபட்டுள்ள நபர்கள் அந்த அட்டவணையின் நெடும்பத்தி (4)க்கு நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள் மற்றும் தொழிலக நிறுவனங்களின் வகைகளைப் பொறுத்தமட்டில், அந்த விவர அட்டவணையின் நெடும்பத்தி (3)க்கு நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் எல்லைகளுக்குள் அவர்களுடைய பணிகளை மேற்கொள்வதற்காக அவர்களை ஆய்வாளர்களாக இதனால் நியமனம் செய்கிறார்.

**அட்டவணை.**

| தொடர் எண் (1) | நபர்கள் (2) | உள்ளூர் எல்லைகள் (3) | தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வகைகள் (4) |
|---|---|---|---|
| 1. | தொழிலாளர் நலத்துறை ஆணையர் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | மோட்டார், ஆம்னி பேருந்து சேவைகள், மோட்டார் அல்லது ஏனைய போக்குவரத்து நிறுவனங்கள், அனைத்து மலைத் தோட்டங்கள், பட்டறைகள், ஏனைய நிறுவனங்களில் அவர்களுக்கான பயன்பாடு, போக்குவரத்து அல்லது விற்பனையின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது தயாரிக்கப்பட்டுள்ள இனங்கள், நீர்வழிப் பயணம், நீர் பாசனம் அல்லது நீர்வழங்கல் அல்லது மின் உற்பத்தி, மின் அனுப்புகை மற்றும் மின் வழங்கல் அல்லது வேறு யாதொரு வடிவில் மின் சக்தியை எடுத்துச் செல்லுதல், சென்னை துறைமுகம் நீங்கலாக கப்பல் துறை, கப்பல் துறைகளில் சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான மேடை அல்லது துறைமுக அணைகரை சம்பந்தபட்ட நடவடிக்கைகளுக்கு தொடர்பான கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், கால்வாய்கள் கட்டுமானம், மேம்பாடு அல்லது பராமரிப்பு தொடர்பான யாதொரு பணிகளுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள். |
| 2. | மண்டல தொழிலாளர் கூடுதல் ஆணையர்கள் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | |
| 3. | மலைத்தோட்டங்கள் முதன்மை ஆய்வாளர் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | அனைத்து மலைத்தோட்டங்கள் |
| 4. | மண்டல தொழிலாளர் (மத்திய அரசு) ஆணையர், சென்னை. | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | கப்பல்துறை கப்பல்துறைகளில் கப்பலில் சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான மேடை, துறைமுக அணைகரை. |
| 5. | சென்னையைத் தலைமையகமாகக் (மத்திய அரசு) கொண்ட தொழிலாளர் உதவி ஆணையர். | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | கப்பல்துறை கப்பல்துறைகளில் கப்பலில் சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான மேடை, துறைமுக அணைகரை. |
| 6. | சென்னையைத் தலைமையகமாகக் (மத்திய அரசு) கொண்ட தொழிலாளர் சட்ட அமலாக்க அலுவலர். | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | கப்பல்துறை கப்பல்துறைகளில் கப்பலில் சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான மேடை, துறைமுக அணைகரை. |

| *தொடர் எண் (1)* | *நபர்கள் (2)* | *உள்ளூர் எல்லைகள் (3)* | *தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வகைகள் (4)* |
|---|---|---|---|
| 7. | தொழிலாளர் இணை ஆணையர் (ஆய்வு) சென்னை. | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | மோட்டார், ஆம்னி பேருந்து சேவைகள், மோட்டார் அல்லது ஏனைய போக்குவரத்து நிறுவனங்கள் அனைத்து மலைத் தோட்டங்கள், பட்டறைகள், ஏனைய நிறுவனங்களில் அவர்களுக்கான பயன்பாடு, போக்குவரத்து அல்லது விற்பனையின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது தயாரிக்கப்பட்டுள்ள இனங்கள், நீர்வழிப் பயணம், நீர்பாசனம் அல்லது நீர்வழங்கல் அல்லது மின் உற்பத்தி, மின் அனுப்புகை மற்றும் மின் வழங்கல் அல்லது வேறு யாதொரு வடிவில் மின்சக்தியை எடுத்துச் செல்லுதல், சென்னை துறைமுகம் நீங்கலாக கப்பல்துறை, கப்பல் துறைகளில் சரக்குகளை ஏற்றி இறக்குவற்கான மேடை அல்லது துறைமுக அணைகரை சம்பந்தபட்ட நடவடிக்கைகளுக்கு தொடர்பான கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், கால்வாய்கள், கட்டுமானம், மேம்பாடு அல்லது பராமரிப்பு தொடர்பான யாதொரு பணிகளுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள். |
| 8. | மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | |
| 9. | தொழிலாளர் (மகளிர் நலன்) உதவி ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் வருவாய் மாவட்டங்கள். | |
| 10. | தொழிலாளர் (மகளிர் நலன்) உதவி ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி வருவாய் மாவட்டங்கள். | |
| 11. | தொழிலாளர் (மகளிர் நலன்) உதவி ஆணையர், சென்னை. | சென்னை, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் வருவாய் மாவட்டங்கள். | |
| 12. | தொழிலாளர் உதவி ஆணையர்கள் (மலைத் தோட்டங்கள்) | 1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 69/1951) கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளூர் அதிகார எல்லைகள். | அனைத்து மலைத்தோட்டங்கள் |
| 13. | தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சட்ட அமலாக்கம்) | 2009 ஆம் ஆண்டு சட்டப்படிக்கான எடை அளவைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/2010) படி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளூர் அதிகார எல்லைகள். | மோட்டார், ஆம்னி பேருந்து சேவைகள், மோட்டார் அல்லது ஏனைய போக்குவரத்து நிறுவனங்கள், அனைத்து மலைத் தோட்டங்கள், பட்டறைகள், ஏனைய நிறுவனங்களில் அவர்களுக்கான பயன்பாடு, போக்குவரத்து அல்லது விற்பனையின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ள, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது தயாரிக்கப்பட்டுள்ள இனங்கள், நீர்வழிப் பயணம், நீர்பாசனம் அல்லது நீர்வழங்கல் அல்லது மின் உற்பத்தி, மின் அனுப்புகை மற்றும் மின் வழங்கல் அல்லது வேறு யாதொரு வடிவில் மின் சக்தியை எடுத்துச் செல்லுதல், சென்னை துறைமுகம் நீங்கலாக கப்பல்துறை, கப்பல்துறைகளில் சரக்குகளை ஏற்று இறக்குவதற்கான மேடை அல்லது துறைமுக அணைகரை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு தொடர்பான கட்டடங்கள் சாலைகள், பாலங்கள், கால்வாய்கள் கட்டுமானம், மேம்பாடு அல்லது பராமரிப்பு தொடர்பான யாதொரு பணிகளுடன் சம்பந்தபட்ட நிறுவனங்கள். |
| 14. | தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் | | |
| 15. | தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் | | |
| 16. | வளர்ச்சி ஆணையர்கள், தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள். | சம்பந்தப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள். | சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலுள்ள அனைத்து நிறுவனங்கள். |
| 17. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அதிகார வரம்பெல்லையின் கீழ் வரும் அனைத்து தொழிற்சாலைகள், 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டடத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1996) அதிகார வரம்பெல்லையின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள். |
| 18. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார முதுநிலை கூடுதல் இயக்குநர். | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அதிகார வரம்பெல்லைக்குள் வரும் அனைத்து தொழிற்சாலைகள். |

| *தொடர் எண்* *(1)* | *நபர்கள்* *(2)* | *உள்ளூர் எல்லைகள்* *(3)* | *தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வகைகள்* *(4)* |
|---|---|---|---|
| 19. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார முதுநிலை கூடுதல் இயக்குநர். (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டடத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1996) அதிகார வரம்பெல்லையின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்கள். |
| 20. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார முதுநிலை கூடுதல் இயக்குநர்கள் | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அதிகார வரம்பெல்லையின் கீழ் வரும் அனைத்து தொழிற்சாலைகள். |
| 21. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள். | | |
| 22. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர். (சோதனை மற்றும் பாதுகாப்பு) | | |
| 23. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர். (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) | | |
| 24. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள். (பதிவு) | | |
| 25. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர். (பயிற்சி மையம்) | | |
| 26. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர். (சோதனை மற்றும் பாதுகாப்பு) | | |
| 27. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி. | | |
| 28. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள் I, II, III. (பயிற்சி மையம்) | | |
| 29. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர். (சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு) | | |
| 30. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர். (சோதனை மற்றும் பாதுகாப்பு) | | |

| *தொடர் எண்* *(1)* | *நபர்கள்* *(2)* | *உள்ளூர் எல்லைகள்* *(3)* | *தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் வகைகள்* *(4)* |
|---|---|---|---|
| 31. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அலுவலகம், திருச்சி. | | |
| 32. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள். | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 8ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளூர் எல்லைகள். | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அதிகார வரம்பெல்லையின் கீழ்வரும் அனைத்து தொழிற்சாலைகள். |
| 33. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள். | | |
| 34. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்கள். (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்). | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1996) 42 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளூர் எல்லைகள். | 1996 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் கீழ்வரும் அனைத்து நிறுவனங்கள். |
| 35. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள். (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | | |
| 36. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர்கள் (கட்டடம் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள்) | | |
| 37. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் (நடமாடும் குழு) | விருதுநகர் வருவாய் மாவட்டம் | 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) அதிகார வரம்பெல்லையின் கீழ் வரும் அனைத்து தொழிற்சாலைகள். |
| 38. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் (நடமாடும் குழு) | | |

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 46, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 25 பிப்ரவரி 2021]*

தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 11/1948 5–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி மற்றும் 9 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 11–09–2019 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2இல் 772 மற்றும் 773 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/746/2019 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார்.

***திருத்தம்***

மேற்சொன்ன அறிவிக்கையில், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்ற தலைப்பின் கீழ் உள்ள உறுப்பினரான

(3) திரு. R. கண்ணன்,
இந்திய பட்டாசு தயாரிப்பாளர்கள் சங்கம்,
திருவாளர்கள் ஆகாஷ் பட்டாசு தொழிற்சாலை,
நரிக்குடி, காக்கிவடன்பட்டி,
சிவகாசி.

என்பவருக்குப் பதிலாக, பின்வரும் உறுப்பினர் பெயர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

(3) திரு. G. குணசேகர பாண்டியன்,
527, S.N. புரம் சாலை,
திருத்தங்கல்–626 130.

**முகமது நசிமுத்தீன்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.